வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 24.07.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

இந்தியாவிற்கும்-ரோமானியாவிற்கும் இடையே, பொருளாதார, மற்றும், முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

**வினாத்தாள் கசிவு** குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அமைப்பதற்கான **வரைவு மசோதா**விற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**வினாத்தாள் கசிவு விவகாரம்** குறித்து, நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இன்று 5ஆவது நாளாகவும், இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மதுராந்தகம் அருகே, **கார் மீது லாரி மோதியதால்** ஏற்பட்ட விபத்தில், **தந்தை-மகனான இருவர்** உட்பட, மூவர் உயிரிழந்தனர்.

-----------------------------

முர்மு 1 (9)

இந்தியாவிற்கும்-ரோமானியாவிற்கும் இடையே, கூடுதல் வர்த்தக ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், இருதரப்பு பொருளாதார, மற்றும், முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இந்தியாவிற்கும், ஐரோப்பிய ஒன்றித்திற்கும் இடையே உத்தேசிக்கப் பட்டுள்ள வரியில்லா வர்த்தக உடன்பாடு, இதற்கு சாதகமாக அமையும் என்று, அவர் தெரிவித்துள்ளார். இன்று ரோமானியாவின் புக்காரெஸ்ட் நகரில், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பேரவைக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றினார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.....

முர்மு 2 (11)

<u>ரோமானியாவின் தனித்துவம் வாய்ந்த அமைவிடம், மற்றும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் அந்நாட்டிற்குள்ள ஒருங்கிணைப்பு காரணமாக, ஐரோப்பிய</u>

சந்தைக்கான இந்தியாவின் தலைவாசலாகவே ரோமானியா திகழ்வதாக, குடியரசுத் தலைவர் கூறினார். பாதுகாப்பு உற்பத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு, மருந்து உற்பத்தி, உணவுப் பதனீடு உட்பட பல துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள இயலும் என்று, அவர் தெரிவித்தார். விக்சித் பாரத் இலக்கை நோக்கி பயணித்து வரும் இந்தியாவில், முதலீட்டாளர்களுக்கு சாதகமான சீர்திருத்தங்களும் கொண்டுவரப் படுவதால், உலக முதலீட்டாளர்களுக்கு பல புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார்.

-----------------------------

*நாடாளுமன்றம்* (13)

நீட் வினாத்தாள் கசிவு விவகாரம் குறித்து, நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இன்று 5ஆவது நாளாகவும், இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை, முதலில் இருமுறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவையில், அலுவல்கள் முதலில் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. வினாத்தாள் கசிவு பிரச்சனை குறித்து விவாதிக்க, ஆரம்பத்தில் இருந்தே அரசு தயார்தான் என்றும், காங்கிரஸ் விதித்த நிபந்தனைகள் காரணமாகவே, இதில் முன்னே செல்ல இயலவில்லை என்றும், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, முன்னதாக மாநிலங்களவையில் கூறினார். முன்னதாக இரு அவைகளிலும், கார்கில் போரில் உயிர்நீத்த இந்திய படையினருக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

-----------------------------

*ரிஜிஜூ* (10)

தேர்வு முறைகேடுகளை தடுக்க, கடும் சட்டம் கொண்டு வருவதில் தாமதங்கள் கூடாது என, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி இருப்பதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். நாடும் இதையே விரும்புவதால், மசோதாவை நிறைவேற்றுவதில் தடைகளை தவிர்த்தல் அவசியம் என்று, அவர் இன்று நாடாளுமன்ற வளாகத்தில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில், மத்திய அரசு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், நாடாளுமன்ற விவாதங்களை எதிர்கட்சிகள் தடைபடுத்தினால், இளைஞர்களின் கோபத்திற்கு ஆளாக நேரும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

-----------------------------

*அண்மைச் செய்தி (9)*

தேர்வு முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அமைப்பதற்கான வரைவு மசோதாவிற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப் பட்டது. உத்தேச மசோதா, அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

*கூட்டம்* (10)

பிஜேபி-சிஜேபி தலைவர்களுக்கு இடையிலான 2ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தைகள், புதுடெல்லியில் இன்று நடைபெற்றன. பிஜேபி சார்பில், மத்திய அமைச்சர்கள் திரு. ஜே.பி. நட்டா, டாக்டர் ஜிதேந்திர சிங் ஆகியோர், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தேர்வு நடைமுறைகளில் சீர்திருத்தம் கொண்டு வருவது குறித்த சிஜேபி தரப்பினரின் கோரிக்கைகளை, இக்கூட்டத்தின் போது தாங்கள் கேட்டறிந்ததாக, திரு. ஜே.பி. நட்டா, பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார். 3 முக்கிய கோரிக்கைகளை சிஜேபி தரப்பினர் முன்வைத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாளை இன்னொரு சுற்று பேச்சு வார்த்தை நடைபெறும் என்று, திரு. ஜே.பி. நட்டா மேலும் தெரிவித்தார்.

-----------------------------

*அமைச்சரவை 1* (4)

கர்நாடகா, மற்றும், ஆந்திர பிரதேசத்தில், பெல்லாரி-குண்டக்கல் இடையே, மொத்தம் ஆயிரத்து 264 கோடி ரூபாய் மதிப்பில், 3ஆவது, மற்றும், 4ஆவது ரயில் பாதை அமைக்கும் உத்தேசத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அமைச்சரவையின் முடிவுகள் குறித்து கூடுதல் விவரங்கள்…..

*அமைச்சரவை* 2 (13)

பெல்லாரி-குண்டக்கல் இடையே, கூடுதல் ரயில் பாதைகளை அமைக்க, பிரதமரின் கதி சக்தி-தேசிய மாஸ்டர் ப்ளான் திட்டத்தின் கீழ், உத்தேசிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால், சம்பந்தப்பட்ட பகுதியில், மொத்தம் 7 லட்சம் மக்கள் தொகையுடன் கூடிய சுமார் 99 கிராமங்களுக்கு, போக்குவரத்து இணைப்புகள் மேம்படும்.

நாட்டின் 3 இடங்களில், மொத்தம் 3 ஆயிரத்து 30 கோடி ரூபாய் மத்திய நிதி உதவியுடன், பிரத்யேக ரசாயன பூங்காக்களை அமைப்பதற்கான பவ்யா

திட்டத்திற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்கான இத்திட்டத்தின் கீழ், உத்தேச ரசாயன பூங்காக்களுக்கு, தலா ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இத்தகவல்களை வெளியிட்டார்.

----------------------------

*மறுப்பு* (8)

டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை மிரட்டும் வகையில், மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் பேசியது போல, சமூக ஊடகங்களில் உலா வரும் வீடியோ, போலியானது என்று, மத்திய அரசு தெரிவித்துள்ளது. போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க, டெல்லி கூடுதல் போலீஸ் கமிஷனருக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா உத்தரவிட்டுள்ளதாகக் காட்டும் வீடியோவும், முற்றிலும் போலியானதே என்று பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது.

----------------------------

*நீதிமன்றம்* (12)

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தை தொடர்ந்து, தேர்வு நடைமுறைகளில் சீர்திருத்தம் கொண்டு வருவதில், இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து, மத்திய அரசும், தேசிய தேர்வு முகமையும், விரிவான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய, உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. தற்காலிக நடவடிக்கைகளை நம்பாமல், அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை அமல்படுத்த, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை விளக்குவதாக பிரமாணப் பத்திரங்கள் அமைய வேண்டும் என்றும், நீதிமன்றம் கூறியுள்ளது. பிரச்சனைகளுக்கு தீர்வுகாண, வழக்கத்தைவிட பலமடங்கு அதிகமான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாக, தலைமை வழக்கறிஞர் திரு. குஷால் மேத்தா நீதிமன்றத்தில் கூறினார். இப்பிரச்சனையில், அடுத்தகட்ட விசாரணை ஜூலை 27ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

----------------------------

*புதுச்சேரி விபத்து* (6)

புதுச்சேரியில் இருந்து சென்னை நோக்கி சென்றுக் கொண்டிருந்த கார் மீது, மதுராந்தகம் அருகே, லாரி மோதியதால் ஏற்பட்ட விபத்தில், தந்தை-மகனான இருவர் உட்பட, மூவர் உயிரிழந்தனர். மதுராந்தகம் போலீசார் இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை சிசிடிவி கேமரா பதிவுகள் மூலம் கண்டுபிடிக்கவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

-----------------------------

*புதுச்சேரி மானியம்* (8)

புதுச்சேரியில், இவ்வாண்டு தைப் பட்டத்தில், புதிய பழத் தோட்டம் அமைக்கவும், பாரம்பரிய மலர்கள், மஞ்சள், வெங்காயம், மற்றும், வீரிய ஒட்டுரக காய்கறிகளை பயிரிடவும், மூடாக்குகளை அமைக்கவும், சாகுபடிக்கு பிந்தைய முறையில், மானியம் வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களின் பெயர்ப் பட்டியல், சமுதாய தணிக்கைக்காக, உழவர் உதவியகங்களின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இப்பட்டியல் குறித்து ஆட்சேபணை உள்ளவர்கள், ஆகஸ்ட் 3ஆம் தேதிக்குள் எழுத்து வடிவில் தெரிவிக்கலாம் என்றும், தோட்டக் கலைத் துறை அறிவித்துள்ளது.

-----------------------------

**E 20 என்னும் எத்தனால் எரிபொருள்-எரிபொருளில் எத்தனால் பயன்பாடு** குறித்த சிறப்பு நேர்முகம், இன்று இரவு, 8.30 மணிக்கு, புதுச்சேரி வானொலியின் **முதன்மை அலைவரிசையில்** ஒலிபரப்பாக உள்ளது. **வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவு** தயாரித்து வழங்கும் இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி **பல்கலைக்கழக பசுமை ஆற்றல் தொழில்நுட்பத் துறையின்** புல முதன்மையர் பேராசிரியர் முகமது ஜாஃபர் அலி கலந்து கொண்டு, எத்தனால் கலந்த எரிபொருளின் பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கிறார்.

-----------------------------

*வானிலை* (10)

வளிமண்டலத்தில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பாதைகள் காரணமாக, இன்று, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி பகுதியிலும், மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், காரைக்கால் பகுதியில், லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், ஓரிரு இடங்களில், மணிக்கு 50 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 30ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்ப்பார்க்கப் படுகின்றது.

-----------------------------

*வருமான வரி (10)*

நாடு முழுவதும், வருமான வரி தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. 1860ஆம் ஆண்டு இதே நாளில்தான், அப்போதைய பிரிட்டீஷ் ஆட்சியாளர்களால், வருமான வரித் துறை நிறுவப்பட்டது. 2010 முதல்,

ஆண்டுதோறும் இந்நாள், வருவமான வரி தினமாக கடைபிடிக்கப் படுகிறது. கடந்த பல ஆண்டுகளில், இந்தியாவின் வருமான வரித் துறையில், வெளிப்படைத் தன்மை, வரி செலுத்துவோருக்கு உகந்த நிர்வாகம், மற்றும், தொழில்நுட்பத்தின் பயன்பாடு, பெருமளவு அதிகரித்து இருப்பதும், PAN மற்றும் ஆதார் எண்ணின் ஒருங்கிணைந்த பயன்பாட்டை தொடர்ந்து, வருமான வரித் துறையில் தற்போது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவிற்கும்-**ரோமானியாவிற்கும்** இடையே, பொருளாதார, மற்றும், முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

**வினாத்தாள் கசிவு** குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அமைப்பதற்கான **வரைவு மசோதாவிற்கு**, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**வினாத்தாள் கசிவு விவகாரம்** குறித்து, நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இன்று 5ஆவது நாளாகவும், இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மதுராந்தகம் அருகே, **கார் மீது லாரி மோதியதால்** ஏற்பட்ட விபத்தில், **தந்தை-மகனான இருவர்** உட்பட, மூவர் உயிரிழந்தனர்.